**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE,**
**FAST TRACK COURT, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )
**STC.No. 13/2023 P.W. 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. ரோகிணி பிரபா (The Assistant Bank Manager, Indian Bank, Nagercoil Branch)** | **Caste** | : | |
| **Father's Name** | : | க/பெ. பிரதிஷ் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.03.2025**
**புகார்தாரர் தரப்பு முதல் விசாரணை**

1. நான் இந்தியன் வங்கி, நாகர்கோவில் கிளையில் உதவி மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். வங்கி கணக்கு எண்: 777336221, 027852 எண் காசோலை வசூலுக்கு வந்தபோது கையொப்பம் வித்தியாசமாக இருப்பதாக 17.11.2022–ம் தேதி காசோலையை வசூல் செய்யாமல் திருப்பிய Return Memo–ன் சான்றிட்ட நகலுடன் வந்து சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எங்கள் கிளை மேலாரருக்கு வந்துள்ளது. அதனடிப்படையில் எனது கிளைமேலாளரின் அறிவுறுத்தலின் பேரின் நான் நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

2. எங்களது வங்கியில் 16.11.2022 தேதி அன்று குழந்தை தெரசா என்ற நபர் காசோலை எண் 027852 என்ற Ex.P2 காசோலையை பணம் பெறுவதற்காக எங்கள் வங்கியில் தாக்கல் செய்தார். மேற்படி காசோலையை நாங்கள் Union Bank Cheque என்பதால் Union Bankக்கு Image ஆக அனுப்பப்பட்டது. மேலும் Union Bank–ல் இருந்து காசோலையில் உள்ள கையொப்பம் Drawer Signature differ என்று எங்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டது. அதனடிப்படையில் எங்கள் வங்கியில் இருந்து காசோலை திருப்பப்பட்டதற்கான குறிப்பாணையில் Drawer Signature differ என்று குறிப்பிட்டு காசோலை திருப்பப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆண்டணி மேரியின் Speciman signature எங்களது வங்கியில் இருக்காது என்றால் சரிதான். மேற்படி காசோலையில் உள்ள கையொப்பத்தினை எங்கள் வங்கி நேரடியாக பரிசோதனை செய்யவில்லை என்றால், சரிதான். மேலும் Union Bank ஆவணத்தின் அடிப்படையில் தான் நாங்கள் Drawer Signature differ என்று குறிப்பிட்டுள்ளோம்.

2. அந்த குறிப்பாணையில் முற்றிலும் மாறுபட்டுள்ளது என்று குறிப்பிடப்படவில்ல என்றால், சரிதான். பொதுவாக வங்கி வாடிக்கையாளரின் கணக்கை வேறு ஏதேனும் 3வது நபர்கள் கேட்டால் அதைப்பற்றி நாங்கள் கொடுக்கமாட்டோம்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
இரணியல்.